2008 ஏப்ரல் 23]

2. தகவல் கோரல்

(அ) மதுரை கோரிப்பாளையத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கு இழைக்கப்பட்ட அவமரியாதை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* முதலில் எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நேரத்தை வீணாக்காதீர்கள், உட்காருங்கள். முதலில் எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. அரி, அனுமதி இல்லாமல் நின்று கொண்டிருக்கக் கூடாது. உட்காருங்கள்.

21-4-2008 அன்று மதுரை, கோரிப்பாளையத்தில் உள்ள பசும்பொன் தேவர் சிலையை சிலர் அவமரியாதை செய்தது குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. இ. மகேந்திரன், திரு. ஆர்.டி. கணேசன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. ஏ.கே. போஸ், திருமதி எஸ். தேன்மொழி, திரு. சி. துரைராஜ், திரு. இரா. விசுவநாதன், திரு. வி.பி. கலைராஜன், திரு. டி. ஜெயக்குமார், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. செ.ம. வேலுசாமி, திரு. எல். ரவிச்சந்திரன், திரு. ஆர். சாமி ஆகியோர் விதி *56*-ன்கீழும், தி.மு.க. சார்பாக திரு. பி. மூர்த்தியும், இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன், திரு. மா. தண்டபாணி, திரு. விடியல் எஸ். சேகர், திரு. எம்.ஆர். சுந்தரம், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் ஆகியோரும், பா.ம.க. சார்பில் திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்ட் *(மார்க்சிஸ்ட்)* கட்சியின் சார்பாக திரு. என். நன்மாறன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. தி. இராமசாமி, திரு. சு. குணசேகரன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. கே. உலகநாதன் மற்றும் ம.தி.மு.க. சார்பாக திரு. வீர இளவரசன் ஆகியோர் விதி *55*-ன்கீழும் கவன ஈர்ப்பாகக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். (குறுக்கீடு) அந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே யார் சம்பந்தப்பட்டு இருக்கிறார்களோ அவர்கள் கைது செய்யப்பட்டும் ஆகிவிட்டது.

முற்பகல் 10-30

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பது, பல கட்சிகளைச் சார்ந்தவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பினை முன்கூட்டியே தங்களிடத்திலே தந்து இருந்தாலும்கூட, ஒருவர்தான் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை முன் மொழிந்து, அதற்கு விடை அளிக்கப்பட்டதற்குப் பின்னர், ஒருவேளை மிக முக்கியமான பிரச்சினையாக இருந்து, வேறு கட்சியைச் சார்ந்தவர்கள் ஏதேனும் கேள்வி கேட்க வேண்டுமானால் கேட்கலாமே தவிர, கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே ஒவ்வொரு கட்சியினரும் பேசுவதாக இருந்தாலும், அப்படி பேசக்கூடிய அளவுக்கு, அந்தப் பிரச்சினையில் விவரமாகப் பேசுவதற்கு அதிக இடம் இல்லை என்பதையும் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் எண்ணிப் பார்த்து, பிரச்சினையை யாராவது ஒருவர் எழுப்பி, அந்த அளவிலே விடை அளிக்க அனுமதிப்பதுதான் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பொருத்தமானதாக இருக்கும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யார், யார் அறிவிப்புக் கொடுத்து இருக்கிறீர்கள் என்று பெயரையெல்லாம் சொல்லியாகிவிட்டது. அத்தனைக் கட்சிகளின் சார்பாக யாராவது ஒருவர் பேசுங்கள். *(குறுக்கீடு)* யார் பேசுவது? *(குறுக்கீடு)* சொல்கிறேன், கேளுங்கள் *(குறுக்கீடுகள்)* அப்பகுதி எந்தச் சட்டமன்றத் தொகுதியிலே இருக்கிறதோ, அந்தச் சட்டமன்ற உறுப்பினர் பேசட்டும். *(கூச்சல்-குழப்பம்)*

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கொண்டிருந்தனர்)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே உள்ள அவ்வளவு பேருக்கும் அந்தப் பிரச்சினையிலே அக்கறை இருக்கும், ஆர்வம் இருக்கும் என்பதிலே தடையில்லை; அவர்கட்கு உரிமையும் இருக்கிறது. ஆனால், சாதாரணமாக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் என்று வருகிறபோது, அந்த நிகழ்ச்சி, எந்தத் தொகுதியிலே நடைபெற்றதோ அந்தத் தொகுதி உறுப்பினரே பேசுவதை எல்லோருமாக ஏற்றுக்கொள்வார்கள். அப்படி இங்கே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் இந்த உரிமை , வரும். ஒருவர் தொகுதியாக இருக்குமானால், அந்தத் தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் அதை எழுப்ப, மற்றவர்கள் அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2008 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சர்க்கார்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஏற்கெனவே இதில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டும் ஆகிவிட்டது.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: பதிலில் சொல்லப் போகிறீர்கள். அதைச் சொல்லுங்கள். அதிலொன்றும் பிரச்சினையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையினுடைய நேரம் வீணாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதுதான் முக்கியம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான பிரச்சினை. ஏற்கெனவே ஸ்ரீரங்கத்தில் தந்தை பெரியார் அவர்களுடைய சிலை உடைக்கப்பட்டபோது, நாம் எல்லாம் மிகவும் வருத்தப்பட்டு அந்த நிலை தொடர்ந்து, தேசியத் தலைவர்கள், அரசியல் ரீதியான தலைவர்களுடைய சிலையை இதுமாதிரி அவமரியாதை செய்யக்கூடிய ஒரு நிகழ்வு எதிர்காலத்தில் நடக்கக்கூடாது என்பதனை அனைத்துக் கட்சியினரும் குறிப்பிட்டுப் பேசினோம். அவரவர்கள் உணர்வுகளைச் சொல்வதற்கு அனைத்துக் கட்சிகளுக்கும் உரிமை இருக்கிறது. புது மாதிரியாக இன்றைக்கு அனைத்துக் கட்சிகளின் சார்பாக ஒருவர் பேசலாம் என்று புதிய நடைமுறையைக் கொண்டு வருவது, எந்த விதத்திலும் சரியாக இராது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இது மிக முக்கியமான பிரச்சினை. மதுரையில் நேற்றைய முன்தினம் நடந்தது. மிகவும் அவமரியாதை செய்யப்பட்டிருக்கின்ற ஒரு பிரச்சினையை, எழுப்பிப் பேசுவதற்கு அனைத்துக் கட்சிகளுக்கும் வாய்ப்பு கொடுப்பதுதான் சரியான தீர்வாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரில்

இருந்து, அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இதிலே எவ்வளவு அக்கறை காட்டுகிறார்களோ, அதைப்போலவே ஆளும் கட்சிக்கும் அதிலே அக்கறை இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், தேவர் திருமகன் சிலையை வைத்தவரே எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிலையைத் திறப்பதற்காக அன்றையதினம் குடியரசுத் தலைவராக இருந்த மாண்புமிகு திரு. கிரி அவர்களை அழைத்து வந்து விழா எடுத்தார்கள். ஆனால், வேண்டும் என்றே, யாரோ ஒருவர் தவறு செய்துவிட்டார் என்பதற்காக இந்த அரசு நடவடிக்கை எடுக்காமல் இல்லை. உடனடியாகக் கண்டுபிடித்து யார் அந்தத் தவறான செயலிலே ஈடுபட்டாரோ அவரைக் கைது செய்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. இன்னும் இரண்டு, மூன்று ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகள் இருக்கின்றன. அதற்குப் பிறகு, மக்கள் நல்வாழ்வுத் துறை மானியத்தின்மீது விவாதம் நடைபெற இருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தயவு செய்து ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுசம்பந்தமாக அரசினுடைய நடவடிக்கை எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட எதிரி கைது செய்யப்பட்டாகி விட்டது. அதற்குப் பிறகும் நீங்கள் நேரத்தை வீணாக்கும் நோக்கத்தோடு செயல்பட்டால் என்ன அர்த்தம்? *(குறுக்கீடுகள்)* சரி, இதைக் கடைசியாக எடுத்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள்.

(ஆ) இலங்கைத் தமிழரின் உரிமைகளைப் பாதுகாத்து இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இலங்கைவாழ் தமிழர்கள்மீது இலங்கை அரசின் இராணுவத் தாக்குதலால் ஏற்படும் உயிர் இழப்பினைத் தடுத்திட இந்திய அரசு விரைவான நடவடிக்கை மேற்கொள்ள தமிழக அரசு, இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம், திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், திரு. தி.க. ராஜா, திரு. கே.வீ. ராமநாதன்,